செ.வெ.எண்.87 நாள்.14.02.2018.

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், தென்மலை பகுதி–1 மற்றும் பகுதி–2 கிராமங்கள் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் 173 பயனாளிகளுக்கு ரூ.18.19 இலட்சம் மதிப்பில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.மனோகரன் முன்னிலையில் வழங்கினார்.

--------

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், தென்மலை பகுதி–1 மற்றும் பகுதி–2 கிராமங்கள் மனுநீதி நாள் முகாம் இன்று (14.02.2018) நடைபெற்றது. இம்மனு நீதிநாள் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப, அவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். தொடர்ந்து, 173 பயனாளிகளுக்கு ரூ.18.19 இலட்சம் மதிப்பில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.மனோகரன் முன்னிலையில் வழங்கினார்.

மனுநீதி நாள் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

மாவட்ட தலைநகரங்களிலிருந்து, தொலைதூர கிராம மக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து துறை அலுவலர்களும் அக்கிராமத்திற்கு சென்று அரசின் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்து கிராம மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நடத்துவது தான் மனுநீதி நாள் முகாம் ஆகும். அரசு அலுவலர்கள் அரசின் திட்டங்களை பெற தகுதிகள் என்ன என்பதையும், எவ்வாறு பெற வேண்டும் குறித்தும் தெரிவித்துள்ளவைகளை பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டும். மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சித் தலைவர்கள் உள்ளிட்டோர்களும் மாதம் ஒரு கிராமத்தில் மனுநீதி நாள் முகாமினை நடத்தி வருகிறார்கள். ஏற்கனவே, மனுநீதி நாள் முகாமினையொட்டி, 252 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இதில் 84 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விவசாயிகள் தங்களது நெற்பயிர்கள் மற்றும் மற்றப் பயிர்களுக்கு அவசியம் காப்பீடு செய்திட வேண்டும். விவசாயிகள் பயிர் காப்பீடு செய்வதால் பெறும் இழப்புகளிலிருந்து தற்காத்து கொள்ள முடியும். ஸ்மார்ட் கார்டு திட்டத்தினால் வேறு நபர்களுக்கு பொருட்களை வழங்க இயலாது. பொருட்களை வாங்கினால் குறுஞ்செய்திகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களின் கைபேசி எண்ணிற்கு உடனடியாக அனுப்பப்பட்டு வருகிறது. பொதுமக்கள் தங்களது சுற்றுப்புறங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். அனைவரும் சுகாதார முறையில் கழிப்பிடங்களை பயன்படுத்த வேண்டும்.

சமூக நலத்துறையின் மூலம் டாக்டர் முத்துலெட்சுமி மகப்பேறு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், மகப்பேறு காலங்களில் மூன்று தவணையாக ரூ.6000/– வீதம் ரூ.18 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை கர்ப்பிணி தாய்மார்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இளைஞர்களுக்கு பல்வேறு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டத்தின் கீழ், இளைஞர்கள் தொழில் தொடங்கிட மத்திய, மாநில அரசுகள் ரூ.10 இலட்சம் முதல் ரூ.1 கோடி கூடிய கடனுதவி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. எனவே, இளைஞர்கள் மாவட்ட தொழில் மைய அலுவலகத்தினை அணுகி பயன்பெற வேண்டும். இத்திட்டங்களை பயன்படுத்தி உங்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திக் கொள்ள வேண்டும். இங்கு பெறப்படும் மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென பேசினார்.

முகாமில், வருவாய்த் துறையின் மூலம் இலவச வீட்டுமனைப் பட்டா 9 பயனாளிகளுக்கு ரூ.1.66 இலட்சம் மதிப்பீட்டில் வீட்டுமனைப் பட்டாக்களையும், 6 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல்களையும், சமூக நலத்துறையின் மூலம் 24 பயனாளிகளுக்கு பிரதிமாதம் தலா ரூ.1000/– உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும், வேளாண்மைத் துறையின் மூலம் 5 பயனாளிகளுக்கு ரூ.49,600/– மதிப்பில் உதவித் தொகைகளையும், தோட்டக்கலைத் துறையின் மூலம் 3 பயனாளிகளுக்கு விதைகளையும், ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் ஒரு பயனாளிக்கு இலவச தேய்ப்பு பெட்டியினையும், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் 109 பயனாளிகளுக்கு இலவச ஆடுகளையும், 13 பயனாளிகளுக்கு நாட்டுக்கோழி வளர்ப்பதற்கான மானியத் தொகையினையும், ஒரு பயனாளிக்கு பசுத்தீவனத்தினையும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மூலம் 2 பயனாளிகளுக்கு செட்டாப் பாக்ஸ்களையும் ஆக மொத்தம் 173 பயனாளிகளுக்கு ரூ.18.19 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இம்முகாமில், தென்காசி கோட்டாட்சித் தலைவர் திரு.ராஜேந்திரன், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.சங்கரலிங்கம், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, கால்நடை பராமரிப்புத் துறை, இணை இயக்குநர் மரு.ராஜேந்திரன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.நிர்மலா, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.கல்யாணசுந்தரம், சிவகிரி வட்டாட்சியர் திருமதி.சாந்தி உள்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.